தமிழின் முதல் கட்டுமான மாத இதழ்.. 18 ஆம் ஆண்டில்.. ஆசிரியர்: சிந்துபாஸ்கர்

CONSTRUCTION ACADEMY
Tradition. Innovation. Performance.

ஆண்டு 18 இதழ் 05 திருவள்ளுவர் ஆண்டு 2049 ஏப்ரல் 2018

# கட்டுமான தொழில்

KATTUMANA THOZHIL

ஏப்ரல் - 2018, ரூ.30/-




CONSTRUCTION INDUSTRY AWARDS 2017

CONSTRUCTION ACADEMY
Tradition. Innovation. Performance.



## Achievement of Excellence Awards 2017

On 29th April 2018, Sunday, 5 00 pm
at
The Music Academy,
Royapettah
Chennai - 14

உலகத்தொழில்நுட்பங்கள் நம் தாய்மொழி தமிழில்...



# அப்பாவிடம் பிடித்தது.. காலம்தவறாமை.. கண்ணியம்... தொழில் அறம்..

**திரு.ஜி. ஹரிநாராயணன் இயக்குனர் ஹரிநாராயணன் ஸ்டக்சுரல்ஸ்**

சென்னையிலும் சென்னையைச் சுற்றிலும் பல்வேறு கட்டுமானங்களுக்கான ஒப்பந்தப் பணிகளை ஏற்று அதை செவ்வனே முடித்துத் கொடுக்கும் நிறுவனம் ஹரிநாராயனா ஸ்ட்ரக்சரல்ஸ். “கடின உழைப்பும் நேர்மையும் சொன்ன நேரத்திற்கு சொன்னபடி பணியை முடித்துக் கொடுக்கும் பொறுப்புணர்வும் வாடிக்கையாளர்களிடையே எங்களுக்கு ஒரு நன்மதிப்பை பெற்றுத் தந்திருக்கிறது” என்று பெருமைப் படக் கூறுகிறார் இந்நிறுவனத்தின் இளம் இயக்குனர் திரு.ஹரிநாராயனன். இவருடன் ஒரு நேர்காணல்.

**உங்களது ஹரினாராயனா ஸ்ட்ரக்சரல்ஸ் நிறுவனத்தின் ஆரம்பம், வளர்ச்சி பற்றி ஒரு சில வார்த்தைகள்?**

இந்த நிறுவனம் எனது தந்தை ஆர் கே கங்காதரன் அவர்களால் 1995 ம் ஆண்டு தனியார் நிறுவனமாகத் தொடங்கப்பட்டு 2002ல் பிரைவேட் லிமிடட் நிறுவனமாக பதிவு செய்யப்பட்டது. இதுவரை மொத்தம் 100 கட்டுமானத் திட்டங்களில் ஒப்பந்த பணிகளை முடித்துக் கொடுத்துள்ளோம். அடுக்குமாடி வீடுகள், வர்த்தக வளாகங்கள், தொழிலகங்கள்,



தகவல் தொழில்நுட்ப நிறுவன கட்டுமானங்கள், கல்வி நிறுவனங்கள் போன்ற பல்வேறு விதமான கட்டுமானங்களில் ஒப்பந்ததாரர் என்கிற முறையில் எங்களுக்கு வழங்கப்பட்ட பணிகளை செவ்வனே செய்து கொடுத்துள்ளோம். நல்ல உள்கட்டமைப்பு வசதிகள் கொண்ட நிறுவனம் எங்களுடையது. டவர் கிரேன், மொபைல் டவர் கிரேன், டவர் விஞ்சுகள், கான்க்ரீட் பாம்புகள், ஆர் எம் சி பேட்சிங் பிளான்ட் போன்ற பல்வேறு சாதனங்கள் சொந்தமாகவே எங்களிடம் உள்ளன. இவற்றை பாதுகாப்பாக வைத்திருக்கவே சென்னையில் கொளப்பாக்கத்தில் மூன்று ஏக்கர் பரப்பளவில் சேமிப்பு தளங்கள் உள்ளன. எங்கள் நிறுவனத்தில் 200 பொறியாளர்களும் தொழில்நுட்ப வல்லுனர்களும் பணியாற்றி வருகின்றனர். ஆகவே ஒரே நேரத்தில் பல்வேறு இடங்களில் பணிகள் நடந்து வந்தாலும் அவை அனைத்தையுமே குறிப்பிட்ட காலகெடுவிற்குள் முடித்துத் தர எங்களால் முடிகிறது.



தற்போது எந்தெந்த திட்டப் பணிகளில் தங்கள் நிறுவனம் ஈடுபட்டுள்ளது? ஆழ்வார்பேட் ப்ராபர்ட்டீஸ் பிரைவேட் லிமிடட் நிறுவனத்திற்காக கிண்டி தொழிற்பேட்டையில்யில் ஒலிம்பியா டெக்னோ ஐ டி பார்க் திட்டத்ததை

நிறைவேற்றி வருகிறோம். இரண்டு அடித்தளத்துடன் கூடிய ஸ்டில்ஸ் மற்றும் பத்து அடுக்குமாடிகளைக் கொண்ட திட்டம் இது. இது போன்று கொட்டிவாக்கத்தில் சுப்பிரமணியம் என்ஜினியரிங் நிறுவனத்திற்காக ஒரு ஏழு மாடி வர்த்தக மற்றும் அலுவலக வளாகம், ஆவடியில் ஐஸ்வர்யா ப்ராப்பர்டீஸ் நிறுவனத்திற்காக சீலியோ ரெசிடென்சி என்ற பெயரில் உருவாகி வரும் குடியிருப்பு வளாகத்திற்கான ஸ்டில்ஸ் மற்றும் ஒன்பது மாடிகளுக்கான பணி, இவை போன்று இன்னும் பல்வேறு திட்டப் பணிகள் நடந்துவருகிறன்றன..

தங்கள் நிறுவனத்தின் குறிப்பிடத் தகுந்த சிறப்புகள் என்று எதைக் குறிப்பிடுவீர்கள்?

இரண்டு முக்கிய அம்சங்கள் இன்றுவரை எங்களை இந்தத் துறையில் சொல்லிக்கொள்ளும்படியான ஒரு இடத்தில் கொண்டுவந்து நிறுத்தியிருக்கிறது. எங்களது ஒவ்வொரு திட்டத்திலும் எங்கள் வாடிகையாளரைக் கவர்ந்ததிருப்பது எங்களது சிறந்த தரமான பணி மற்றும் குறிப்பிட்ட தேதிக்குள் பணியை நிறைவேற்றித் தந்திருப்பது ஆகிய இரண்டு அம்சங்கள்தாம். பணியில் முழு ஈடுபாடு, வாடிக்கையாளர்களிடம் சிறந்த நட்புணர்வு, அவர்களது வரைபடத்தில் குறிப்பிட்டுள்ளபடி சரியாக பணியை முடித்துத் தருவது இன்னும் இதுபோன்ற ஒரு சிறந்த கார்ப்பரேட் நிறுவனத்திற்கு இருக்க வேண்டிய பல நல்ல பண்புகளும், எங்கள்








பணியாளர்களின் திறமை, கடின உழைப்பு ஆகிய இவையெல்லாம் எங்களது இந்த உயர்வுக்கு காரணம் என்று சொல்வேன். அதோடு பணியாளர்கள் பாதுகாப்பில் நாங்கள் மிகவும் கவனம் செலுத்தி வருகிறோம். தரம், புதுமையான சிந்தனைகள், ஒருங்கிணைந்த செயல்பாடு, பணியாளர் பாதுகாப்பு, நேர்மை, சமூக அக்கறை, நேரத்தில் பணியை முடித்துக் கொடுப்பது, நம்பகத் தன்மை இவை அத்தனையும் சேர்ந்து வாடிக்கையாளர்களின் திருப்தியையும் தொடர்ந்த முன்னேற்றத்தையும் எங்களுக்கு ஈட்டித் தந்திருக்கிறது. விரைவில் எங்கள் நிறுவனத்திற்கு ISO சான்றிதழ் கிடைக்க இருக்கின்றது.




உங்கள் நிறுவனம் செய்து வரும் பணிகளில் உங்களுக்கு பிடித்த கட்டுமானப் பணி எது? நாவலூரில் ஓ எம் ஆர் சாலையில் கட்டப்பட்டு வரும் கே சி ஸ்கூல் என்னும் பள்ளிக் கட்டடத்தை குறிப்பிட்டுச் சொல்லலாம். கீவராஜ் டெக் பார்க்கிற்கு சொந்தமான கட்டடம் இது. அறு கோண வடிவத்தில் (Hexagonal) அமையப் பட்டுவரும் இந்தப் பள்ளிக்கூடம் எனக்குப் பிடித்த கட்டுமானம். தேன் கூடுகள் அறு கோண வடிவத்தைக் கொண்டிருப்பவை. அதில் வசிக்கும் தேனீக்கள் சுறுசுறுப்பிற்கு பேர் போனவை. இதில் பயிலும் மாணவர்களுக்கு இந்த தேன்கூடு போன்ற வடிவம் மிகவும் பிடித்தமானதாக இருக்கும் என்பது எனது நம்பிக்கை.



நீங்கள் இவ்வளவு இளம் வயதில் ஒரு கட்டுமான நிறுவனத்தின் இயக்குனராக இருந்து நிர்வகித்து வருகிறீர்கள். இது உங்களுக்கு கடினமாக இல்லையா? இல்லை, ஏனென்றால் நான் பிறந்ததில் இருந்தே தொழில் ரீதியாக எனது தந்தையின் ஒவ்வொரு செயல்பாட்டினையும் கூடவே இருந்து கவனிக்கக் கூடிய ஒரு வாய்ப்பை



பெற்றிருந்தேன். ஆகவே கட்டடக் கட்டுமானம் என்பது புத்தகங்கள் மூலமாக கற்றுக்கொண்ட பாடத்திற்கும் அப்பால் ஒரு அனுபவப் பாடமாக எனக்கு என் தந்தையின் மூலம் கிடைத்திருக்கிறது. இது தவிர, பள்ளியில் படிக்கும்போது பள்ளிப் பாடங்களுக்கு அப்பாற்பட்ட பல்வேறு திறமைகளையும் வளர்த்துக் கொள்ளும் வாய்ப்பு எனக்கு கிடைத்தது. குறிப்பாக நிகழ்வுகளை ஏற்பாடு செய்து பலரையும் ஒருங்கிணைத்து அவற்றை வெற்றிகரமாக நடத்தும் திறன் எனக்குள் இருந்தது. அந்தத் திறனை வெளிக்கொண்டுவரும் வாய்ப்பினை பள்ளி வாழ்க்கை எனக்கு வழங்கியது . பள்ளியில் படிக்கும் போது படிப்பைத் தவிர விளையாட்டிலும், கலாச்சார நிகழ்ச்சிகளிலும் மிகவும் ஆர்வம் காட்டினேன். எங்களது பள்ளி விளையாட்டுக் குழுவிற்கு நானே தலைமை ஏற்று அனைத்துப் பள்ளி டோர்னமெண்டுக்கு அழைத்துச் செல்வதுண்டு. ரோட்டரி கிளப் இன்டர்நேஷனல் அமைப்பிலிருந்து அப்போது அதன் உறுப்பினர்கள் எங்கள் பள்ளிக்கு வந்து எங்களோடு உரையாடுவார்கள். அந்த உரையாடல்களில் நான் ஆர்வமுடன் பங்கேற்பதுண்டு. அவர்களது பல்வேறு சமூக நலப் பணிகளிலும் என்னை இணைத்துக் கொண்டேன். அதற்காக ரோட்டரி கிளப் அதன் சந்திப்பு ஒன்றின் போது என்னை அழைத்து சிறப்பு செய்தது. அப்போது ரோட்டரி கிளப் மூலம் நாங்கள் ஒரு ஆண்டில் மேற்கொண்ட பல்வேறு சமூக நலப் பணிகள் குறித்து ஒரு ஆவணப் படம் தயாரித்து அதை நியூயார்க்கில் இயங்கிவரும் ‘ஜி ஒய் எல் சி’ (Global Young Leaders Conference) எனப்படும் உலக இளம் தலைவர்கள் அமைப்பிற்கு அனுப்பி வைத்தோம். இந்தியாவில் பல்வேறு பள்ளிகளில் இருந்து பெறப்பட்ட பல ஆவணப் படங்களில் எங்கள் ஆவணப் படம் முதல் பரிசை வென்றது. அந்தப் பரிசைப் பெறுவதற்கு நான் எங்கள் பள்ளியின் சார்பாக நியூயார்க் மற்றும் வாஷிங்க்டன் சென்று வந்தது எனக்கு மறக்கமுடியாத அனுபவம். அங்கு 12 நாட்கள் தங்கியிருந்து பல்வேறு நாடுகளில் இருந்து வந்திருந்த மாணவத் தலைவர்களோடு கலந்து உரையாடும் வாய்ப்பு எனக்குக் கிடைத்தது. இந்த அனுபவம் எல்லாம் இப்போது நான் வகிக்கும் பதவியில் செவ்வனே செயல்பட உதவியாக இருக்கிறது. அதன்பின்பு அண்ணா பல்கலைக் கழகத்தில் கட்டுமானப் பொறியியல் துறையில் சேர்ந்தேன். அப்போது எனது தந்தை நடத்திவந்த இந்த ஹரிநாராயனா ஸ்ட்ரக்சரல்ஸ் நிறுவனத்தின் பல்வேறு கட்டுமானப் பணிகளிலும் நேரம்







கிடைக்கும் போதெல்லாம் என்னை இணைத்துக் கொண்டேன். ஆக கல்லூரியில் படிக்கும் போதே செயல்முறை அனுபவத்தை எனது தந்தையின் நிறுவனம் மூலம் பெற்றேன். முக்கியமாக கட்டுமான இடங்களுக்கு சனி ஞாயிற்றுக் கிழமைகளில் நேரில் சென்று அங்கு நடக்கும் பணிகளை பார்வையிடுவதோடு நிறுவனத்தின் அதிகாரிகளோடு கலந்து பேசி கட்டுமானத் துறையில் எனது அறிவை மேலும் வளர்த்துக் கொண்டேன். அலுவலகத்திற்கு வந்து நிர்வாகப் பணிகளிலும் அப்போதே என்னை ஈடுபடுத்திக் கொண்டேன் . இவை எல்லாம் சேர்ந்து இப்போது இந்த நிறுவனத்தை நிர்வகிப்பதற்கு எனக்கு உதவியாக இருக்கிறது. ஒரு நிறுவனத்தை நடத்தக் கூடிய நிர்வாகப் பணியை திறம்பட ஆற்ற எனக்குக் கிடைத்த வாய்ப்பை முறையாகப் பயன்படுத்திக் கொண்டேன். பில் பண்ணுவதில் இருந்து டெண்டர் சமர்ப்பிப்பது வரை எல்லா நிலைகளிலும் அனுபவம் கிடைத்திருக்கிறது. சிவில் என்ஜினியரிங் முடித்துவிட்டு பணியில் இருந்து கொண்டே இப்போது பகுதி நேரமாக எம் பி ஏ படித்து வருகிறேன். இதற்கெல்லாம் காரணம் எனது பெற்றோரின் சரியான வழிகாட்டுதல்தான். எனது தந்தைதான் நிறுவனத்தின் நிர்வாக இயக்குனராக இருக்கிறார். அவர் ஒரு கடின உழைப்பாளி. இரவுபகல் பார்க்காமல் உழைக்கக் கூடியவர். சிவில் என்ஜினியரிங் படித்து முடித்த பின், ஒரு ஏழு ஆண்டுகள் ஒப்பந்தப் பணிகளை ஏற்று நடத்தும் ஒரு தனியார் நிறுவனத்தில் நிர்வாகியாக இருந்து பணியாற்றிய பின்னர், இந்த ஹரிநாராயனா ஸ்ட்ரக்சரல்ஸ் நிறுவனத்தை 1995ல் தொடங்கினார். அன்றுமுதல் இன்றுவரை அவர் பணி செய்து கொடுத்த அத்தனை நிறுவனங்களிடமும் ஒரு நல்ல உறவை பராமரித்து வந்திருக்கிறார். சொன்ன சொல் மாறாமல் உறுதியுடன் இருந்து பணியை முடிக்கும் இவரது அந்த அக்கறையும் வியாபார நெறிமுறைகளும் பணியின் தரமும் இத்துறையில் உள்ள புகழ்பெற்ற கட்டடக் கலை வல்லுனர்களுடனும் சிறந்த கட்டமைப்பு பொறியியல் ஆலோசகர்களுடனும் தொழில் ரீதியாக இவர் கொண்டுள்ள நட்பை பராமரிக்க உதவியாக உள்ளது. ஆகவேதான் தொடர்ந்து எங்கள் வாடிக்கையாளர்கள் எங்களுக்கு திரும்ப திரும்ப பணிகளை தந்துகொண்டிருக்கிறார்கள். நிறுவனம் சம்பத்தப்பட்ட முக்கியமான முடிவுகளை எடுப்பது என் தந்தைதான். எந்த சந்தர்ப்பத்திலும் நேர்மையிலிருந்து கொஞ்சமும் விலகக் கூடாது என்பது எனது தந்தை எனக்குக் கற்றுத் தந்திருக்கும் வாழ்க்கைக் கல்வி. எதையுமே அப்புறம் பார்த்துக் கொள்ளலாம் என்று தள்ளிப் போட மாட்டார்.

உடனுக்குடன் முடித்து விடுவார். இந்த குணாதிசயம் கட்டுமானத் துறையில் இருப்பவர்களுக்கு மிகவும் முக்கியம். அவரை எனது ரோல் மாடலாகக் அப்படியே என் வாழ்கையில் ஏற்றுக் கொண்டுள்ளேன். எனது தாயார் சுப்புலட்சுமி அவர்கள் நிறுவனத்தின் இன்னொரு இயக்குனர். நிறுவனத்தின் நிர்வாகப் பணிகள் அனைத்தும் அவருடையது. சிறு பிழை கூட நேர்ந்துவிடாதபடி நிர்வாகத்தை அவர் நடத்திச் செல்கிறார். ஒவ்வொரு பணியையும் அதன் போக்குகளை கவனமாக் கண்காணித்து நிர்வாகம் தங்கு தடையின்றிச் செல்லும் வகையில் மிகவும் கவனமாக செயல்படுவதில் வல்லவர். புதுமைகளை புகுத்ததுவதன் மூலம் நிறுவனத்தின் வளர்ச்சிக்கு பெரிய பங்காற்றி வருகிறார். கணக்கு வழக்குகளை முறையாக பராமரித்து வருமான வரிக்கணக்கை தாக்கல் செய்வது போன்ற முக்கியமான விசயங்களில் அரசு விதிமுறைகளின் படி அனைத்தும் கச்சிதமாக நடைபெறும் வகையில் மிகக் கவனமாக பார்த்துக்கொள்கிறார்.

நிறுவனத்தில் உங்கள் பணியாளர்களிடத்தில் உங்கள் உறவுமுறை எப்படி உள்ளது? ஒரு நிறுவன உரிமையாளர் மகன் என்கிற கர்வம் எப்போதுமே என்னிடத்தில் இருந்தது கிடையாது. நிறுவனத்தின் அனுபவம் வாய்ந்த பணியாளர்கள் அத்தனை பேரையும் மதித்து நடக்கும் பண்பை எனது தந்தை எனக்குக் கற்றுக் கொடுத்திருந்தார். கட்டுமானம் நடக்கும் இடங்களில் மற்றவர்கள் வருவதற்கு முன்பே நான் சென்றுவிடுவேன். அது பணியாளர்கள் மத்தியில் எனக்கு ஒரு மரியாதையை தேடித்தந்தது. அதுபோல் அன்றைய பணிகள் அனைத்தும் முடியும் வரை அங்கேயே இருந்து எல்லா செயல்பாடுகளிலும் என்னை இணைத்துக் கொள்வேன். அந்த நாள் பயனுள்ளதாகக் கழிந்தால்தான் எனக்கு நிம்மதியாக தூக்கம் வரும். தொழிலை கற்றுக் கொள்ளக் கிடைத்த ஒவ்வொரு சிறிய வாய்ப்பையும் நான் பயன்படுத்திக்கொண்டேன். நீங்கள் இயக்குனர் பதவி ஏற்றுக்கொண்ட பின்பு இதுவரை எத்தனை திட்டம் நிறைவேறியுள்ளது? நான் பொறுப்பேற்றுக் கொண்ட பின்னர் இதுவரை மூன்று திட்டங்களில் பங்கு பெற்றுள்ளேன். கட்டுமானத் துறையின் எதிர்காலம் குறித்து? இன்னும் 10 ஆண்டுகளில் இந்தியா மிக பெரிய வளர்ச்சியைக் காண இருக்கிறது. மற்ற ஐரோப்பிய அமெரிக்க நாடுகளில் எல்லாம் வளர்ச்சி ஒரு தேக்க நிலையை அடைந்துவிட்டது. ஆனால் சைனா, இந்தியா ஆகிய இரு நாடுகளிலும் வளர்ச்சிப் பணிகள் நிறைய பாக்கி இருக்கிறது. இந்தியாவின் முன்னேற்றத்தில் கட்டுமானத் துறையின் பங்குதான் மிகப் பெரிய அளவில் இருக்கப் போகிறது.

புதிதாகப் படித்துவிட்டு வரும் இளம் பட்டதாரிகளுக்கு நீங்கள் தரும் அறிவுரை என்ன? நேர்மை, கடின உழைப்பு, நேரம் தவறாமை, வாக்கு தவறாமை, பெரியவர்களிடத்தில் மரியாதை, அனைவரோடும் நட்புணர்வு, பொறுமை, நம்பிக்கை இதுபோன்ற பண்புகளை வளர்த்துக் கொண்டால் வாழ்கையில் வெற்றி நிச்சயம்.

## உடல் நலம்

அந்தி நேரம், நள்ளிரவு நேரங்களில் உண்பது கூடாது. இரவில் ஏதும் உண்ணாமல் உறங்கினால் உடல் தளர்ச்சி அடையும்.

இரவில் குறைவாக உட்கொண்டால் உடல் இலேசாக இருக்கும். மனதை நிலையில் உடம்பு சுறுசுறுப்பாய் இருக்கும். பகலில், மனதை ஈர்க்கும் காரியங்கள் பல; அதனால் பகலில் தியானம் செய்வது எளிதன்று. அதனால், இரவிலோ எல்லா உயிர்களும் உறங்கி விடுகின்றன. இயற்கையாகவே, அமைதி நிலவுகிறது. மனம் எளிதில் ஒருமுகப்படுகிறது.

